R4857

# DESTROYING GOD'S WORD
# தேவனுடைய வார்த்தையை அழித்தல்

எரேமியா 36

"நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்." ஏசாயா 40:8

தீர்க்கதரிசி எரேமியா சிறையில் அடைக்கப்பட்டார். ராஜ்யத்தின் அழிவு கொஞ்ச அளவுக்கு நிறைவேறியது. அதனால் ஜனங்கள் கொஞ்சம் மனம் வருத்தம் அடைந்தனர். இதனுடன் ராஜாவும் இணைந்து கொண்டான். ஆனால் அது பயத்தினால் ஏற்பட்ட வருத்தமேயல்லாமல் செய்த குற்றத்திற்கான மனவருத்தம் அல்ல. தேவ செய்தி எரேமியா மூலம் வந்ததால் ராஜா எரேமியாவிடம் பகைமை கொண்டான். மேலும் அழிவைப் பற்றிய அறிவிப்பு தீர்க்கதரிசியிடமிருந்து வராதபடிக்கு அவரைத் தடுத்தான். எனினும் கர்த்தர் தீர்க்கதரிசியிடம் அவரது அனைத்து தீர்க்கதரிசனங்களையும் ஒரு புத்தகச் சுருளில் பழங்கால முறைப்படி எழுதச் சொன்னார். எரேமியா வாயால் சொல்லச் செல்ல பாருக்கு என்பவன் புத்தகச் சுருளில் எழுதினான்.

கர்த்தரால் சொல்லப்பட்ட இந்த புத்தகச் சுருள் எல்லா ஜனங்களும் கேட்கும்படியாக ஆராதனைக்காகவும் மனந்திரும்புதலுக்காகவும் கூடும் போது வாசிக்கப்பட வேண்டும். தீர்க்கதரிசி போகமுடியாதிருந்ததால், அவர் பாருக்கை அழைத்து அந்த புத்தக சுருளை எடுத்துச் சென்று தேவாலயத்தில் எல்லா ஜனங்களும் கேட்கும்படி வாசிக்கச் சொன்னார். அழிவைப் பற்றிய அந்த தீர்க்கதரிசனம் ஆழ்ந்த உணர்வை ஏற்படுத்தியது. ஜனங்களின் பிரபுக்களில் ஒருவன் அங்கு இருந்து அந்த தீர்க்தரிசனங்களை கேட்டு ராஜா சபையின் ஆலோசனைக்காரர்களிடம் கூறினான். அவர்கள் பாருக்கை அழைப்பித்து அதை தங்கள் அனைவருக்கும் முன்பாகவும் வாசிக்கும்படி கூறினார்கள். அவர்களும் அதைச் கேட்டு மிகவும் பயமுற்றவர்களாய் அதை ராஜாவிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆனால் இதற்கிடையில் பாருக்கும் எரேமியாவும் ஒளித்து வைக்கப்பட்டார்கள். ராஜாவின் கோபம் அதிகமாக இருந்தது.

அந்த புத்தகச் சுருளை ஒரு வேதபாரகனை ராஜா தனக்கு முன்பாக வாசிக்கும்படி கூறினான். அந்த பிரதியை வாசிக்கும் போது, இரண்டு அல்லது மூன்று பத்திகளை வாசித்துக் கொண்டிருக்கும் போது ராஜா அதை கத்தியினால் வெட்டி நெருப்பில் போட்டான். முழு புத்தகச் சுருளும் நெருப்பில் வெந்து போனது. தேவனுடைய கட்டளைப்படி எரேமியா மறுபடியும் சொல்லச் சொல்ல பாருக்கு ஒரு வேதபாரகனாயிருந்து அதை எழுதினான். இந்த பிரதி முந்தினதைக் காட்டிலும் இன்னும் முழுமையாக செய்யப்பட்டது. அதில் மற்றவைகளோடு யோயாக்கீமின் வம்சத்தில் தாவீதின் சிங்காசனத்தில் உட்காரும்படி ஒருவனும் இரான் என்கிற தேவ கட்டளையும் சேர்க்கப்பட்டது.

### தேவனுடைய வசனம் அழிக்க இயலாதது

தாமஸ் பெயின், வால்ட்டர் மற்றும் இங்கர்சால் ஆகியோர் தேவனுடைய வசனம் அபத்தமாக காணப்படுகிறது என்றும் அது மனிதரிடையே செல்வாக்கை பெறாது என்றும் கற்பனை செய்தார்கள். ராபர்ட் இங்கர்சால் கூறியதாவது: "பத்து வருடங்களில் வேதாகமம் வாசிக்கப்படாது." அந்த அற்பமான மனிதன் வேதத்தை எப்படி அறியாதிருந்தான் பாருங்கள்!

பிரசித்தமான வைக்ளிப் பைபிளின் முற்பகுதி சாத்தான் மற்றும் மற்றவர்கள் மத சம்பந்தமான மற்றும் மத சம்பந்தமற்ற காரியங்களுக்கு தங்களால் முடிந்தவரை வெளிச்சத்தை காட்டியிருக்கிறார்கள். அவர்கள் தங்களது சக்தியை பயன்படுத்தின அளவுக்கு வெளிச்சம் இன்னும் அதிகமாக பிரகாசத்தைக் கொடுத்தது.

டின்டேல் வேதாகமம், தேவனுடைய வார்த்தையை அழிக்க முடியாது என்று நாம் சொல்லுகிறதையே விளக்குகிறது. டின்டேல் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருக்கும் போது தமது முழு சக்தியையும் வேதாகம மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினார். அவர் விரோதிகளிடம் குறிப்பிட்டதாவது: "தேவன் என் வாழ்க்கையை விட்டிருந்தால் நான் பல வருடங்களுக்கு முன்பே ஏர் உழும் ஒரு பையனை உங்களைக் காட்டிலும் அதிகமாக வேத வாக்கியங்களை அறியும்படி செய்திருப்பேன்."

வேதாகமத்தை ஆங்கிலத்தில் வெளியிடும் டின்டேலின் திட்டத்திற்கு இங்கிலாந்தில் தீவிரமான எதிர்ப்பு இருந்தது. ஆகையால் அந்த திட்டத்தை ஜெர்மனுக்கு எடுத்துச் சென்று 1525இல் புதிய ஏற்பாட்டின் அவரது மொழி பெயர்ப்பை வெளியிட்டார். அபரிதமிதமான பிரதிகள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டன. லண்டன் பிஷப் அவரால் முடிந்த அளவுக்கு அநேக பிரதிகளை வாங்கி பரி. பவுலின் கிராஸில் **(St. Paul's Cross)** தீயிலிட்டு எரித்தார். இன்னும் அநேக பிரதிகள் வந்தன. அவர் அவைகளை அழிக்க முடியவில்லை. அவர் அனைத்து பிரதிகளையும் வாங்குவதற்கு பணத்தை வசூலித்தார். அவற்றை வாங்கும் வேலை பார்க்கிங்டன் என்ற வியாபாரியிடம் கொடுக்கப்பட்டது. அவர் ஜெர்மனி சென்று அனைத்து பிரதிகளையும் வாங்கினார்.

டின்டேலிடம் அவர் கூறியதாவது: "வில்லியம், நீங்கள் ஏழையாக இருக்கிறீர்கள். அதிகமாக புதிய ஏற்பாடுகளை வைத்திருக்கிறீர்கள். நான் ஒரு வியாபாரியை ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர் பணத்தை ஏற்பாடு செய்து அனைத்து பிரதிகளையும் வாங்குவார்." டின்டேல் கேட்டார்: "யார் அந்த வியாபாரி?" "திரு. பார்க்கிங்டன்" என்று லண்டன் பிஷப் பதிலளித்தார். டின்டேல் கூறினதாவது: "ஓ! ஏனெனில் அவர் அவற்றை வாங்கி எரிப்பார்." "ஆம், அவர் அதைச் செய்வார்"

என்று பிஷப் பதிலளித்தார். டின்டேல் மிகவும் சந்தோஷப்பட்டார். ஏனெனில் அவர் அதன்முலம் தனது கடனை சரிக்கட்ட முடியும். அவர் கூறியதாவது: "தேவனுடைய வார்த்தையை எரிப்பதற்கு எதிராக உலகமானது கூக்குரல் இடும்." அதிலிருந்த கிடைத்த பணத்தினால் தவறுகள் இல்லாத சிறந்த திருத்திய மொழி பெயர்ப்பை வெளியிட்டார். அது எரித்ததைக் காட்டிலும் சிறந்ததாக இருந்தது.

## சிறந்த விளக்கங்கள் எதிர்க்கப்பட்டன

வேதகாமத்தை அழிக்க முயற்சிக்கிற நாட்களை நாம் கடந்து வந்திருந்தாலும். சத்தியத்தை எதிர்க்கிற காலத்தை நாம் கடக்கவில்லை. வேதாகமத்தை ஆராய்ந்து அதன் கருத்துகளை உணர்ந்து கொள்ளுவதற்கு பதிலாக, தேவனுடைய பிள்ளைகளை அதை ஆராதிக்கும்படி சாத்தான் மயங்கச் செய்வான். அதன் பலனாக தேவனுடைய வார்த்தையிலிருந்து தற்போது பிரகாசிக்கிற வெளிச்சத்தை சிலர் மாத்திரம் எதிர்க்காமல், இருண்ட காலத்தில் வந்த அநேக காரியங்கள் வேதாகமத்திற்கு எதிராக இருக்கிறது என்று நமக்கு வெளிப்படுத்துகிறர்கள். சபையின் பெரும்பாலான வெளிப்படையான ஆசிரியர்கள் வேதாகம ஆராய்ச்சிகளை இருதய பூர்வமாக எதிர்க்கிறார்கள். அதையும் கூட மிக ஜாக்கிரதையாக முன்னரே ஜனங்களுக்கு பயப்படுவதினால் எதிர்க்கிறார்கள். அதாவது யூதர்களுக்கு பயப்படுவதினால்.

தேவனுடைய வார்த்தையானது இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவுவரை அதிகமதிமாக பிரகாசிக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளும்படி வேத வாக்கியங்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை நமக்கு கொடுக்கிறது. "அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனத்தை இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்று பொழுது விடியும் வரை கவனித்திருப்பது நலமாயிருக்கும்." (2 பேதுரு 1:19)

லண்டனைச் சேர்ந்த பிஷப், டின்டேலின் மொழி பெயர்ப்பை எதிர்த்தார். ஏனெனில் கால நடைமுறைகள் வேத வாக்கியங்களோடு இசைவாக இருக்கவில்லை. இன்றைக்கும் கூட இருண்ட காலத்தின் போதனைகள், பாரம்பரியங்கள், விசுவாச அறிக்கைகள் இன்னும் மதிக்கப்படுகின்றன. வேதாகமத்தை சரியாக புரிந்து கொண்டால் அது வெட்கத்துக்குரியது என்பதை தெரிந்து கொள்ளுவோம். ஆதலால் தான் தேவனுடைய வார்த்தையை சரியானபடி புரிந்து கொள்ளுதல் எதிர்க்கப்படுகிறது. எனினும் தேவனுடைய வார்த்தை என்றென்றைக்கும் நிற்கும். சத்திய ஆவி சத்தியத்தின் பிள்ளைகள் அனைவரையும் உண்மையிலே விடுவிக்கும்.

"வேதம் மண்ணோடு நசுக்கப்பட்டாலும், மறுபடியும் எழும்பும்;
தேவனுடைய நித்திய காலங்கள் அதனுடையது."